# டிசம்பர் – 12 – புதன்

## தூய குவாட்டலுப்பே அன்னை

## வானதூதர் அவரைப் பார்த்து, மரியா, அஞ்சவேண்டாம்: லூக். 1:30

---

### முதல் வாசகம் : ஏசாயா 40 : 25 – 31

"யாருக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? எனக்கு நிகரானவர் யார்?" என்கிறார் தூயவர். உங்கள் கண்களை உயர்த்தி மேலே பாருங்கள் அவற்றைப் படைத்தவர் யார்? வான் படையை எண்ணிக்கை வாரியாய் வெளிக்கொணர்ந்து ஒவ்வொன்றையும் பெயர் சொல்லி அழைப்பவர் அன்றோ? அவர் ஆற்றல்மிக்கவராயும் வலிமை வாய்ந்தவராயும் இருப்பதால் அவற்றில் ஒன்றேனும் குறைவதில்லை. "என் வழி ஆண்டவருக்கு மறைவாய் உள்ளது என் நீதி என் கடவுளுக்குப் புலப்படவில்லை" என்று யாக்கோபே, நீ செல்வது ஏன்? இஸ்ரயேலே, நீ கூறுவது ஏன்? உனக்குத் தெரியாதா? நீ கேட்டதில்லையா? ஆண்டவரே என்றுமுள கடவுள் அவரே விண்ணுலகின் எல்லைகளைப் படைத்தவர் அவர் சோர்ந்து போகார் களைப்படையார் அவரது அறிவை ஆய்ந்தறிய இயலாது. அவர் சோர்வுற்றவருக்கு வலிமை அளிக்கின்றார் வலிமையிழந்தவரிடம் ஊக்கம் பெருகச் செய்கின்றார். இளைஞர் சோர்வுற்றுக் களைப்படைவர் வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர். ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர் அவர்கள் ஓடுவர் களைப்படையார் நடந்து செல்வர் சோர்வடையார்.

**பதில்பாடல் :** என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு

### இரண்டாம் வாசகம் : யூதித் 13 : 18 – 19

பின்னர் ஊசியா யூதித்திடம் "மகளே, உலகில் உள்ள எல்லாப் பெண்களையும்விட நீ உன்னத கடவுளின் ஆசி பெற்றவள். விண்ணையும் மண்ணையும் படைத்த கடவுளாகிய ஆண்டவர் போற்றி! அவரே நம் பகைவர்களின் தலைவனது தலையை வெட்டி வீழ்த்த உன்னை வழிநடத்தியிருக்கிறார். கடவுளின் ஆற்றலை நினைவுகூரும் மாந்தரின் உள்ளத்திலிருந்து உனது நம்பிக்கை ஒருபோதும் நீங்காது.

### நற்செய்தி : லூக்கா 1 : 26 - 38

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்த மானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம்மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரைவிட்டு அகன்றார்

**தியானம்:** ஆண்டவரை நாம் வாழ்த்துகின்ற போது மன மகிழ்ச்சியோடு வாழ்த்தவேண்டும் உள்ளத்தின் நிறைவோடு வாழ்த்தவேண்டும். இறைவனை வாழ்த்துவதும் வணங்குவதும் நம் வாழ்வின் முக்கியானதொன்றாகும். இன்று மக்கள் மத்தியில் கடவுளை வணங்குவதற்கும் போற்றுவதற்கும் வேலைப்பழுவின் காரணத்தினால் நேரம் இல்லை என்று சொல்கின்றார்கள். கடவுளைப் போற்றுவதும் புகழ்வதும் தான் நம்முடைய வாழ்வின் முதன்மையான இலக்காக இருக்கவேண்டும். அதற்கு நேரம் இல்லை என்று சொல்வதை ஏற்க முடியாது. ஏனென்றால் நம் வாழ்வில் கடவுளுக்கு தான் முதன்மையான நேரத்தைக் கொடுக்க வேண்டும். நமக்கு வேலை இருக்கின்றது என்பதற்காக நாம் சுவாசிக்காமல் இருக்கின்றோமா? சுவாசம் இல்லை என்றால் வாழ்வு இல்லை. அது நம்முடைய அடிநாதம். அதுபோல தான் கடவுளும் நம்முடைய வாழ்வின் அடிநாதம். கடவுள் இல்லை என்றால் நமக்கு இவ்வாழ்க்கை இல்லை. கடவுள் இல்லை என்றால் இந்த உலகம் இல்லை. கடவுள் இல்லை என்றால் இவ்வுலகத்தில் ஒன்றுமே இல்லை. கடவுள் தான் நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கின்றார். இந்த மனநிலை நம்மோடு இருக்கின்ற போது நம்மால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவரைப் போற்றமுடியும் உள்ளத்தின் நிறைவை அனுபவிக்க முடியும் அந்த நிறைவின் மனமகிழ்ச்சியில் ஆண்டவரை ஆர்ப்பரிப்போடு வாழ்த்தமுடியும் என்பதை நம் வாழ்வில் உணர்ந்து வாழ்வோம் ஆமென்.